**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**அசல் வழக்கு எண். 258/2020**

**வா.சா.1 – பாலாமணி**

**23–02–2026 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. எனது குடும்பத்தார் எந்த வருடம் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் யார் யாருக்கு எவ்வளவு விஸ்தீரணம் ஒதுங்கியது என்றால் கெட்டிமுத்துகவுண்டர், அருணாசலகவுண்டர், ரங்கசாமி கவுண்டர் ஆகியோர்கள் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள். பாகப்பிரிவினையின் அடிப்படையில் தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பாகப்பிரிவினை பத்திரத்தில் வண்டித்தடம் 14 அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொல்வது போல் பாகப்பிரிவினை பத்திரத்தில் 14 அடி அகல வண்டித்தடம் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் பிறந்தது முதல் அதில் தான் சென்று வருகிறேன்.

2. எந்த ஆவணத்தின் அடிப்படையில் தடம் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் முதலில் இருந்து அவ்வாறு தான் உள்ளது. வீடு உள்ள பூமி 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். வீடு உள்ள பூமியில் 3 பங்கு உள்ளது.அது இரண்டு பங்கு தடத்தை சுருக்கிவிட்டார்கள். என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள புகைப்படத்தில் உள்ள பிரதிவாதிகளின் வீடு 50 ஆண்டுகளுக்கு மேல் உள்ளது என்றால் சரிதான். வீட்டிற்கு தென்புறமாக கிழமேல் தடம் உள்ளது. பிரதிவாதிகளின் வீட்டின் தென்புறம் உள்ள தடத்தை தான் நான் பயன்படுத்திவருகிறேன்.

3. பிரதிவாதிகளின் வீடு சம்மந்தமாக எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. அது குறித்து நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை. தாவா வரைபடத்தில் எனது பூமிக்கு தென்மேற்கில் தாவா வண்டித்தடம் செல்வதாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். நிலஅளவையரின் வரைபடத்தை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் உள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நிலஅளவையரின் வரைபடத்தில் எனது பூமியில் இருந்து கிழபுறம் 4மீட்டர் தள்ளி தாவா தடம் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் தாவா மாதிரி வரைபடத்தில் உள்ளவாறு தடம் கோருகிறேனா அல்லது நிலஅளவையரின் வரைபடத்தில் உள்ளவாறு தடம் கோருகிறேனா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் தடம் வேண்டும்.

4. நிலஅளவையரின் வரைபடத்தில் உள்ள தவறுகளை ஆணையர் அவரது அறிக்கையில் கூறியுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நிலஅளவையரின் வரைபடத்தில் இரண்டு தடங்கள் தனித்தனியாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் இரண்டு தடங்கள் இல்லை ஒரே தடம் தான் உள்ளது. நிலஅளவையரின் வரைபடத்தில் இரண்டு தடங்கள் சொல்லப்பட்டுள்ளதால் நான் எந்த தடத்தை கேட்கிறேன் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் மேற்கில் இருந்து கிழக்கே வரும் 1சி–ல் இருந்து வரும் தடத்தை தான் நான் கேட்கிறேன். எங்களுக்கு பாத்தியப்பட்ட க.ச.எண்.444/1ஏ1 சொத்து முழுவதற்கும் கம்பி வேலி போட்டுள்ளேன் என்றால் ஒரு பக்கம் மட்டும் போட்டுள்ளேன். தடம் செல்லும் வடபுறம் மட்டும் கம்பி வேலி போடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. நிலஅளவையரின் வரைபடத்தில் எனது இடத்தில் இருந்து 4 மீட்டர் தள்ளி தடம் காண்பிக்கப்பட்டுள்ளதால் நான் கம்பி வேலியை அகற்றினால் தான் தாவா தடத்தை வாதிகளும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் பயன்படுத்த இயலும் என்றால் சரியல்ல. எனது பூமிக்கு கிழபுறம் உள்ள க.ச.439 காலையில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு சொத்து உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்திற்கு தாவா தடத்தின் வழியாகத்தான் செல்லமுடியும் என்றால் சரிதான். நான் தான் பிரதிவாதிகள் அவர்களது பூமிக்கு செல்வதற்கான தடத்தை கம்பி வேலி போட்டு தடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 வரைபடத்தில் தாவா தடத்திற்குள் 1 முதல் 3 பிரதிவாதிகளின் வீடு உள்ளது என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகளின் வீட்டு பகுதியில் தடத்தை 8 அடியாக தான் எப்போதும் பயன்படுத்திவந்தார்கள் என்றால் சரியல்ல. எப்போதும் 14அடி வழித்தடம் இருந்ததில்லை என்றால் 2020ல் ஜேசிபி வைத்து மண்ணை போட்டு மேடு செய்தார்கள்.

6. வீட்டிற்கு தென்புறம் வழித்தடமாக நான் பயன்படுத்தி வந்ததாக நான் ஏற்கனவே சொல்லியுள்ளதால் வீட்டிற்கு தென்புறம் 8 அடி தான் உள்ளது என்றால் சரியல்ல 14அடி உள்ளது. 8 அடி வழித்தடத்தை பயன்படுத்துவதற்கு 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு ஆட்சேபனை இல்லை என்றால் 8 அடியில் வண்டி செல்ல முடியாது. 50 ஆண்டுகளுக்கும் மேலாக 8 அடி வழித்தடத்தை தான் பயன்படுத்தி வந்தேன் என்றால் நான் பிறந்தது முதல் 14அடியாகத்தான் இருந்தது. வழித்தடத்தை நான் பயன்படுத்துவதை 1 முதல் 3 பிரதிவாதிகள் இதுநாள் வரை இடையூறு செய்யவில்லை என்றால் சரியல்ல.மண்ணை வெட்டி போட்டுவிட்டார்கள். பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு பொய்யானது என்றால் சரியல்ல. நான்

கேட்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடியாக வேண்டுமென்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.02.23 12:49:47 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.